கட்டட முடிவு சான்று பெறுவதிலிருந்து விலக்கு! ஈரோடு மாவட்டம் - சம்பத் நகரில்

# தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் 108 அடுக்குமாடி குடியிருப்புகள்!

## சட்டப்பேரவையில் – வீட்டு வசதி – நகர்ப்புற வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கை பதிலுரையில் – அமைச்சர் எஸ்.முத்துசாமி அறிவிப்பு!

**சென்னை, ஜூன் 24 -**

**சட்டப்பேரவையில் நேற்று முன்தினம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசிய அமைச்சர் எஸ்.முத்துசாமி, “ஈரோடு மாவட்டம் - சம்பத் நகரில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் சார்பில் 108 அடுக்கு மாடி குடியிருப்புகள் கட்டப் படும்” என்பது உள்ளிட்ட பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டார்.**

சட்டப்பேரவையில் அமைச்சர் சு.முத்துசாமி ஆற்றிய பதிலுரை வருமாறு:-

முதலமைச்சர் அவர்கள், வீட்டு வசதித் துறையின் சார்பாக பல ஆய்வுக் கூட்டங்களை நடத்தி, பல திட்டங்களை உருவாக்குவதற்கு காரணமாக இருந்து பல ஆலோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, முதலமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்திலே என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, 2, 3 திட்டங்கள் சம்பந்தமாக நம்முடைய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் பேசி, அதிலே பல முன்னேற்றங்கள் ஏற்படுவதற்குக் காரணமாக இருந்திருக்கிறார்கள். எனவே, அவருக்கும் இந்த நேரத்திலே என்னுடைய மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல, நம்முடைய அவை முன்னவர் உட்பட அமைச்சர் பெருமக்கள் பல நேரங்களிலே, பல திட்டங்களைக் கொடுப்பதற்காக அவர்கள் எடுத்துக்கொண்ட அக்கறை, அதையெல்லாம் இந்த நேரத்திலே நினைத்து, அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல, சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும், சட்டமன்றத்திலே இருக்கிற அனைத்துக் கட்சிகளினுடைய தலைவர்களுக்கும், இங்கே உரையாற்றிய சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய பேரவைத் தலைவர், பேரவைத் துணைத் தலைவர் மற்றும் கொறடாவுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, இந்தத் துறையினுடைய சார்பாக, இந்தக் கொள்கை விளக்கக் குறிப்புகளையும், மற்ற அனைத்துப் பணிகளையும் செய்வதற்கு உறுதுணையாக இருந்த அனைத்து அதிகாரிகளையும், தலைமைச் செயலாளர் உட்பட, முதல மைச்சருடைய செயலாளர்கள், மற்ற அனைத்துத் துறையினுடைய செயலாளர்கள், அவர்களுக்கு உடனிருந்து பணியாற்றிய அதிகாரிகள் அத்தனை பேருக்கும் இந்த நேரத்திலே என்னுடைய மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.



இங்கே உரையாற்றிய சட்டமன்ற உறுப்பினர்கள் பல்வேறு கருத்துகளை இங்கே பதிவு செய்திருக்கிறார்கள். முதலிலே பேசிய உறுப்பினர் டாக்டர் இரா. இலட்சுமணன் அவர்கள், 2,500 சதுர அடி பரப்பளவில் இருக்கிற நிலத்தில், 1,500 சதுர அடி கட்டடம் கட்டுவதற்கு CC தேவையில்லை என்பதைச் சொன்னார்கள். அதற்கு அனுமதியே அவர்கள் வாங்க வேண்டிய அவசியமில்லை. அப்படித்தான் முதலமைச்சர் அவர்கள் சொல்லி, அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அதிலே விதிமுறைகள் கண்டிப்பாக கடைபிடிக்கப்பட வேண்டும். அதற்காக, முன் அனுமதியைப் பெறவேண்டிய அவசியமில்லையேயொழிய, விதிமுறைகள் முழுமையாகக் கடைபிடிக்கப்பட வேண்டும். அதைத் தெளிவுபடுத்துவது நம்முடைய கடமையென்று நான் கருதுகிறேன். எனவே, இந்த நேரத்திலே அந்தக் கருத்தை அவர்களுக்கு நான் சொல்ல விரும்புகிறேன். அதேபோல, உறுப்பினர் ஈ. இராஜா பேசுகிறபோது பல கோரிக்கைகளைச் சொல்லியிருக்கிறார்கள். நிச்சயமாக அவையெல்லாம் நிறைவேற்றப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, அன்பிற்குரிய சகோதரர் JMH. அசன் மௌலானா பேசுகிறபொழுது மிக முக்கியமான கருத்துகளையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள்.

எனவே, அது மிகவும் ஆலோசித்து, மிக ஆழமாக சிந்தித்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கையாகும். எனவே, அதைப் பற்றி இப்போது சொல்வதற்கு வாய்ப்பில்லை. அதை, பின்னர் உங்களுக்குச் சொல்கிறேன் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, வீடுகள் அதிக வாடகையிலே இருக்கின்றன என்று சொன்னார்கள். ஒப்பீடு செய்து பார்க்கிறபோது, நிச்சயமாக தனியாரைவிட நாம் குறைவாகத்தான் இருப்போம். இருந்தாலும்கூட, அதைப்பற்றி ஆய்வு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**முழுமைத் திட்ட நில உபயோக வகைப்பாடுகளை பொதுமக்கள் அறிந்துகொள்ள ஏதுவாக ‘நிலப்பயன் தகவல் அமைப்பு’**

வேளச்சேரியில் இருக்கிற மண்டபம் விரைவாக சீர்செய்யப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வீடு வழங்க வேண்டு மென்று சொல்லியிருக்கிறார்கள். தயாராக இருக்கிறோம்; நீங்கள் எந்த வீடு வேண்டுமென்று எழுதிக் கொடுத்துவிட்டு, அதற்கு எவ்வளவு விலை என்பதையும் உங்கள் கையிலே கொடுத்துவிடுகிறோம். அதைச் செய்தால், வீட்டு வசதி வாரியத்திற்கு அது ஒரு பயனுடையதாக இருக்கும்; எங்களுக்கும் பெருமையாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகி றேன். எனவே, அந்தக் கருத்தை சொன்னதற்காக அவருக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, ஜோதி இங்கே பேசியபோது, செய்யாறிலே பழைய கட்டடமாக இருக்கிற அந்த வீடுகளை இடித்து புதிதாகக் கட்ட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றி ஆய்வு செய்து, கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, உறுப்பினர், அன்புக்குரிய சகோதரர் மாரிமுத்து அவர்கள் பல கருத்துகளை இங்கே சொன்னார்கள். அவர், கிரையப் பத்திரம் வருவதிலே இருக்கிற பிரச்சினைகளைப் பற்றிச் சொன்னார்கள். நான், உங்களுக்குச் சொல்ல வேண்டுமென்றுச் சொன்னால், முதலமைச்சர் அவர்கள் இதைப்பற்றி தனியாக ஒரு முறை ஆய்வு செய்து, அதற்காக தனியாக முகாம்கள் நடத்தி, கிரையப் பத்திரங்கள் உரியவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். என்னுடைய உரையிலே அதற்கான விளக்கத்தை நான் தருகிறேன். எனவே, அதிலே பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

அதேபோல, எல்லாத் தரத்தைச் சார்ந்தவர்களுக்கும் வீடு கிடைக்க வேண்டுமென்று சொன்னீர்கள். அதில், ஏற்கெனவே, LIG, MIG மற்றும் HIG வீடுகள் என இருக்கின்றன. எனவே, அதிலே இன்னும் எப்படி மாற்றம் வர வேண்டுமென்று நீங்கள் கருதுகிறீர்களோ, அதை உங்களுடைய கருத்தாகச் சொன்னால், அதிலே கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

### டாஸ்மாக் பணியாளர் ஊதியம்!

அதேபோல, TASMAC பணியாளர்களுடைய சம்பளத்தைப் பற்றி சொன்னீர்கள். ஏற்கெனவே, அதைப் பற்றி பேசி, அதிலே சில உயர்வுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அவர்களுக்கு இருந்த பல குறைபாடுகள் நீக்கப்பட்டி ருக்கின்றன. காரணம், ELECTRICITY BILL கட்டணத்தை அவர்களே கட்டுவதுபோல இருந்தது. அதையெல்லாம், இப்போது, தலைமையகத்திலிருந்து கட்ட வேண்டுமென்று நாங்கள் முடிவு செய்தோம். அதைப்போல், வாடகை. எனவே, பல குறைபாடுகள் நீக்கப்பட்டிருக்கின்றன. இருந்தாலும், அந்தத் தொழிற்சங்கங்களோடு தொடர்ந்து பேசி, அவற்றைத் தீர்ப்பத ற்கான நடவடிக்கைகள் எடுக்கிறோம் என்பதை உத்தரவாதமாக இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, சரவணக்குமார் அவர்கள், பெரியகுளத்திலே உள்ள அரசு வாடகைக் குடியிருப்பினைப் பற்றிச் சொன்னார்கள். இப்போது, அங்கே 72 குடியிருப்புகள் இருக்கின்றன. அவற்றில் 59 குடியிருப்புகள் குடியிருக்க தகுதியானதாக இருக்கின்றன. 13 குடியிருப்புகள் தகுதியில்லாதாக இருக்கின்றன. இதற்கு மேலேயும் தேவையென்றாலும் அல்லது அந்தக் குடியிருப்புகளை புதுப்பித்துக் கட்டுவதாக இருந்தாலும் அதற்கான நடவடிக்கைகளைக் கண்டிப்பாக இந்த அரசு எடுக்கும் என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

### 36.819 மனைகள் வரன்முறை!

அதேபோல, துறையினுடைய சார்பாக, நகர ஊரமைப்பு துறை சார்பாக, SINGLE WINDOW SYSTEM கொண்டுவர வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் மிகத் திட்டவட்டமாக சொல்லியிருந்தார்கள். எனவே, அதற்கான பல நடவடிக்கைகள் எடுத்து, அந்தத் திட்டம் இப்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது. மனைப் பிரிவிற்காக வந்த விண்ணப்பங்கள் 15,608. அவற்றில், 10,685க்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. சிலவற்றிற்கு அனுமதி மறுக்கப் பட் டிருக்கிறது. மற்றவை ஆய்விலே இருக்கின்றன. கட்டட வரைபடத்திற்காக 7,093 மனுக்கள் வந்திருக்கின்றன. அவற்றில், 3,179க்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. சில குறைபாடுகளின் காரணமாக மறுக்கப்பட்ட மனுக்களும் இருக்கின்றன. மீதம் இருப்பவை பரிசீலனையில் இருக்கின்றன. இதை எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால், இந்த SINGLE WINDOW SYSTEM என்ற காரணம். அவர்கள் சிரம மில்லாமல், சுலபமாக அனுமதியைப் பெறுவதற்கு வாய்ப்பைத் தர வேண்டுமென்பதற்காகத்தான் முதலமைச்சர் அவர்கள் அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதேபோல, மனைகள். அவர்கள் APPROVAL இல்லாமலே, ஏற்கெனவே அந்த மனைகளை விற்று இருக்கிறார்கள். எனவே, அதனை வரன்முறைப்படுத்துவதற்கான ஒரு திட்டம். அந்தத் திட்டத்தின்கீழ் ஏறத்தாழ 36,819 மனைகள் வரன்முறைப் படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதற்காக பலமுறை அவர்களுக்கு வாய்ப்புக் கொடுத்து, கால அவகாசம் கொடுத்து அது செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும்கூட நாங்கள் அதிகாரிகளோடு பேசியிருக்கிறோம். இன்னும் எங்காவது விடுபட்டிருந்தால் அவர்களை நேரடியாக அழைத்து அந்த வரன்முறை உள்ளே அவர்கள் வரவேண்டுமென்ற ஒரு கட்டாயத்தை ஏற்படுத்தலாம். அது பொது மக்களுடைய நலனைக் கருதிதான் அதைச் செய்வதற்கான ஏற்பாட்டைச் செய்கிறோம். அதேபோல, HACA பகுதி என்று சொல்லப்படுகின்ற மலைப் பகுதியைச் சார்ந்த இடங்களிலே முதலிலே அது செய்யப்படாமல் இருந்தது.

இப்பொழுது 87 விண்ணப்பங்கள் வரப்பெற்றதில், 62 விண்ணப்பங்களுக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்ற விண்ணப்பங்கள் பரிசீலனையில் இருக்கின்றன. அதிலே மேலும் அவர்களுக்கு ஒரு கால அவகாசம் கொடுக்கலாம் என்றும் இங்கு முடிவெடுத்து சொல்லப்பட்டிருக்கிறது. அதேபோல, கல்வி நிறுவனங்கள் கட்டிய கட்டடங்களில் பல கட்டடங்கள் வரைபட அனுமதியே இல்லாமல் கட்டப்பட்டிருந்தன. எனவே, அதற்கும் ஒரு தனியான மனுவைப் பெறலாம் என்று

தொடர்ச்சி 8ஆம் பக்கம்

